**அனுப்புநர்**

திரு. சா.சேதுராம வர்மா,
இணை இயக்குநர் (மேல்நிலை),
அரசுத் தேர்வுகள் இயக்ககம்,
சென்னை – 600 006.

**பெறுநர்**

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்,
இணை இயக்குநர் (கல்வி), புதுச்சேரி.

**ந.க.எண். 304079/எச்.1/2018** **நாள் :08.02.2019.**

**ஐயா/அம்மையீர்,**

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6 – மார்ச் 2019, மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத் தேர்வு – பெயர் பட்டியலை பதிவிறக்கம் செய்து சரிபார்த்துக் கொள்ளுதல் – சார்பு.

**பார்வை :** இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதங்கள், நாள்.06.12.2018 மற்றும் 23.01.2019.

-----

பார்வையில் காணும் கடிதங்களில் மார்ச் 2019, மேல்நிலை இரண்டாமாண்டு (+2) பொதுத் தேர்வு தொடர்பாக, அனைத்து மேல்நிலை பள்ளித் தலைமையாசிரியர்களும் தங்கள் பள்ளிக்கு வழங்கப்பட்டுள்ள User ID மற்றும் Password-ஐ பயன்படுத்தி பள்ளி மாணாக்கரின் பெயர் பட்டியலை பதிவிறக்கம் செய்து, அதில் பெயர் சேர்த்தல், நீக்கம் செய்தல் மற்றும் திருத்தங்கள் இருப்பின் முதன்மைக் கல்வி அலுவலக User ID மற்றும் Password-ஐ பயன்படுத்தி திருத்தங்கள் மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டது. மேற்படி திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு அதில் விடுபட்ட மாணாக்கர் எவரேனும் இருப்பின் அம்மாணவர்களின் விவரத்தினை 28.01.2019–க்குள் இவ்வலுவலகத்திற்கு அனுப்பிடுமாறு தெரிவிக்கப்பட்டது.

மேற்கண்டவாறு மேல்நிலை இரண்டாமாண்டு பள்ளி மாணாக்கரின் பெயர் பட்டியலில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ள பெயர் பட்டியலை **08.02.2019** மாலை **08.00** மணி முதல் **11.02.2019** காலை **10.00** மணி வரையிலான நேரத்தில் மட்டும் அனைத்து மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களும் அரசுத் தேர்வுகள் இணையதளத்திற்கு (www.dge.tn.gov.in) சென்று தங்கள் பள்ளிகளுக்கென வழங்கப்பட்டுள்ள User ID மற்றும் Password-ஐ பயன்படுத்தி பதிவிறக்கம் செய்து பெயர்ப்பட்டியலை சரிபார்த்துக் கொள்ளுமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. பெயர்ப்பட்டியலில் மாணாக்கர் பெயர் ஏதும் விடுபட்டிருப்பின் அவ்விவரத்தினை (பெயர்ப்பட்டியலில் சேர்க்க மட்டும்) இவ்வலுவலகத்திற்கு **12.02.2019-க்குள் நேரில் வந்து ஒப்படைக்க வேண்டும்** எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அதன்பிறகு எக்காரணத்தைக் கொண்டும் பெயர் பட்டியலில் சேர்க்க இயலாது எனவும் மீளவும் திருத்தங்கள் சேர்க்க பரிந்துரை செய்பவர்கள் மீது தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

**ஒம்/-**
**இணை இயக்குநர் (மேல்நிலை)**

**நகல்:**
அனைத்து மாவட்டக் கல்வி அலுவர்கள்,
அனைத்து உதவி இயக்குநர்கள்.